றோயல் கல்லூரி

வெளியீடு



# நவரசம்



navarasam

1991

# சமர்ப்பணம்

நற்றமிழதனை நயமாக நவில்ந்திட
நாடினோம் நாடகக் கலையை
நலமாய் நாடகத் தமிழதை நாட்டிட
வேண்டிய உதவிதனை நலிதல் இன்றியே
முன்னின்று நடத்திட்ட பெற்றோர் தமக்கே,
தாழ்களில் பணிந்து தரமான நூலிதை
சமர்ப்பணம் செய்கிறோம் தயவுடனே

# றோயல் கல்லூரி

## தமிழ் நாடக மன்றம்

அளிக்கும்

# நாடக விழா 1991

**இடம் : நவரங்க மண்டபம்**

**காலம் : 11-03-1991 திங்கள் மாலை 4.30 மணி**

இதழாசிரியர்கள்

பிரதம இதழாசிரியர் : எம். ருஸ்தி அமீர்

ஆ. லெ. அப்துல் பாரி

கணேசராஜா அமுதன்

# ROYAL COLLEGE

## TAMIL DRAMATIC SOCIETY

PRESENTS

# DRAMA FESTIVAL '91

**Venue : NAVARANGAHALA**

**Date : 11-03-91 Monday 4.30 p. m.**

**SOUVERNIOR EDITORS**

Chief Editor: M. Rusdhy Ameer

A. L. Abdul Bary

Ganesharajah Amuthan

*With best Compliments from:*

# WORLD LINK
## COMMUNICATIONS

**OPEN 24 HOURS**

FAX, TELEX, / IDD / LOCAL CALLS,
PHOTOCOPY, TYPING, AND POSTAL SERVICES

294, Galle Road, Wellawatte.

Phones: 503575, 503576
585061, 508328

Fax: 94-1-503575
Telex; 23261 LINK CE

## தலைவர்

திரு. பி. சூரியாரச்சி

## சிரேஷ்ட உப தலைவர்கள்

திரு. மா. கணபதிப்பிள்ளை   திருமதி அ. கோபாலன்   திருமதி கிருபாலரட்ணம்

## மாணவத் தலைவர்

மு. அஸ்ஹர் யூசுப்

*செயலாளர்*
சே. நி. உ. மு. உடயார்

*உப செயலாளர்*
பா. சந்திரபிரகாஷ்

*பொருளாளர்*
க. சுரேஷ் குமார்

*உப பொருளாளர்*
எ. ஜெ. ஜே. வேதநாயகம்

*இதழ் ஆசிரியர்கள்*
மு. ர. ருஷ்தி அமீர்
சி. க. அமுதம்
ஆ. லெ. அ. பாரி

*செயற்குழு உறுப்பினர்கள்*
அ. ல. மு. தாஹிர்
மு. சு. இம்தினன் ஹுசைன்
சே. ம. சே. மு. அக்ரம்
அ. நரேந்திரன்
மு. முனீர் யூசுப்
அ. மு. சில்மி அஹமட்

## President

Mr. B. Suriarachchi
(Principal)

## Teachers - Incharge

Mr. M. Kanapathipillai   Mrs. A. Gobalan   Mrs. Kirubalaratnam

## Student Chairman

M. Azhar Yoosuf

**Secretary**
S. N, U. M. Udayar

**Asst. Secretary**
B. Chandra Pragash

**Treasurer**
K. Suresh Kumar

**Asst Treasurer**
E. G. J Vethanayagam

**Editors**
M. R. Rushdi Ameer
S. K. Amutham
A. L. A. Bari

## Committee Members

A. L. M. Thahir
M. S. Imtinan Hussain
S. M. S. M. Aqram
A Narendran
M. Muneer Yoosuf
A. M. Silmy Ahamed

**With the best Compliments of:**

★

# N. T. N.

## BEARINGS

**Sole Agents and Distributors**

## Consolidated Bearing & Supply Ltd.

29, Bristol Street, Colombo - 1.

SRI LANKA

Tel : 448317, 448165

Fax : 447215, 436568

Telex: 21381

Cable: IMPOBEAR

# தமிழ் வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தாய்மொழி!
என்றென்றும் வாழியவே!

# COLLEGE SONG

(1) Thy spirit First to life awoke
In eighteen hundred and thirty five:
Beneath the sway of March and Boake,
Thenceforth did Lanka's learning thrive

Refrain

School where our fathers learnt the way before us,
Learnt of books and learnt of men, Through thee we'll do the same
True to our watch word "Disce Aut Discede",
We will learn of books and men, and learn to play the game

(2) Within thy shade our fathers trod
The path that leads to 'man's estate:
They have repaid the dept they owed
They kept thy fame inviolate

(2) And we their loyal sons now bear
The torch, with hearts as sound as oak;
Our Lusty throats now raise a cheer,
For Hartley, Harward, March and Boake.

*With best Compliments from:*

# KAMALA JEWELLERS

Dealers in Gems, Jewellers

341, Galle Road Bambalapitiya

COLOMBO - 4.

Telephone: 501995

# Principal's Message

It is with much Pleasure that I contribute this message for Publication in "Navarasam" issued to mark the occasion of this years Tamil Drama Festival. I am happy that the Present members of our Tamil Dramatic Society have resumed the Staging of this event and have put in much enthusiasm and effort to organize it.

Drama is a very important component of a country's culture and Participation gives much scope for the expression of talen Parti culatly among students. This Drama Fesfival is there for very welcome not only because of the opportunities It has given our own students but also for the opportunity extended to students of other Schools has well Our Tamil Dramatic Society has been Progressively expandin the scope of this Festival and the audience can look forward to Intresting and entertaining performances.

I thang the teacher in Charge Mr. M. Kanapathipillai and the members of the Society for their enthusiastic efforts and wish this Drama Festival all the success in certainly deserves.

**B. Suriarachchi**
Principal
Royal College.

## றோயல் கல்லூரி தமிழ் நாடக மன்றம் நடாத்தும்

கொழும்பு மாவட்ட பாடசாலைகளுக்கிடையில்
நடைபெறும் தமிழ் நாடகப் போட்டி
சிறப்புற நடைபெற

சபரிமலை ஐயப்ப சுவாமியை பிரார்த்திக்கிறோம்

ஸ்ரீ ஐயப்பதாஸ் சாம்பசிவ சரவணபவக் குருக்கள்
பீடாதிபதி

*அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடம்*
*தலைவர்*

இந்து சமய கலாச்சார முத்தமிழ்ச்சங்கம்
*120, பிக்கறிங்ஸ் ரோட்,*
*கொழும்பு - 13.*

## பிரதம அதிதியின் ஆசிச் செய்தி

றோயல் கல்லூரி தமிழ்ப் பகுதியினர் ஒழுங்கு செய்து நடாத்தும் நாடகவிழா சிறப்பாக நடைபெற எனது வாழ்த்துக்களை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாடகம் எத்தரப்பினரும் நன்கு புரிந்து இரசித்து மகிழக் கூடிய ஊடகமாகும். முத்தமிழில் ஒன்று நாடகம். எமது தமிழினம் தொன்று தொட்டு வளர்த்து வந்துள்ளது. பண்பாட்டினைப் பிரதிபலிப்பதாக நாடகம் விளங்குகிறது, மக்களின் அழகுணர்வை வளர்க்கவும், மனிதப் பண்பினைப் பேணவும் உதவும் அற்புதக் கலை நாடகம் ஆகும்.

பாடசாலை மாணவர்கள் நாடகத் துறையில் ஈடுபாடு கொள்வதையிட்டு நான் மனம் மகிழ்கின்றேன். நாடகம், நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லனவற்றையே செய்ய உதவ வேண்டும். எவரையும் புண்படுத்தாது, மக்சளின் பண்பை உயர்த்தும் படிப்பினைகளையும் வாழ்வினை மேம்படுத்தும் பண்புகளையும் நாடகம் மூலம் உணர்த்தப்பட வேண்டிய தேவை இன்று உள்ளது. கலைஞர்களும் கற்றோரும் இத்தேவையை உணர்ந்து நாடகக் கலையை வளர்ப்பார்களாக.

கல்வி இராஜாங்க அமைச்சர்.
இரா. புலேந்திரன்

With best Compliments from:

# KALA TRADERS

151 DAM STREET
COLOMBO 12.

Phone: 448574, 448747
435284, 435272

*With best Compliments from:*

# Harco Textiles Ltd.

DEALERS OF FURNISHING AND CURTAINING

31, SECOND CROSS STREET
COLOMBO 11,

TEL: 449856

**With the best Compliments of:**

# UNICRAFT JEWELLERS

(Gem and Jewellery)

Geniven 22ct Gold in Bangels Rings Studs, Necklaces and Brecelats

No. 416, R. A Demel Mawatha

COLOMBO - 3. (Opp. Mahanama Viddyalaya)

With best Compliments from:

KIST

# PURE BEVERAGES CO. LTD.

74 Union Place Colombo-2

Tel: 24212, 24213, 436376

**With the best Compliments of**

# NEW MAKS TEXTILES

For High Quality Textiles, & Fancy Goods

609, Galle Road,
Mount Lavinia.

With best Compliments from

★

# BANANA LEAF RESTAURANT

86, GALLE ROAD
COLOMBO-4

T. P. 584403

நாடகமன்ற பொறுப்பாசிரியரின்

# ஆசிச் செய்தி

அன்பிற்குரியவர்களே!

தில்லையில் கூத்தனய் நின்று திருநடனம் புரிந்து, உலகெல்லாம் நாடகம் என்பதை உலகு தோன்றிய காலத்திலேயே உணரவைத்த சிவனில் இருந்து, இன்று ஆளுக்கொரு பாத்திரம் ஏற்று புவி என்ற நாடகமேடையில் ஏதோ ஒரு வகையில் நாடக மாடிவரும் கதாபாத்திரங் களான மனிதன்வரை. நாடகத்தின் ஊடாகவே தம் கருத்தை புலப்படுத்துவதைக் காண்கி ரேம்.

தமிழை, இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என மூன்ருக வகுத்தனர் தமிழ்மொழிச் சான்ருேர் இதில் இசைத்தமிழ் இயற்றமிழ் இரண்டும் கலந்து அபிநயத்துடன் சேரும்போது, நாடகத்தமிழ் உருவாகிறது. இரசம்கள் ஒன்பது என்பதால் நவரசம் என்பர். நவரசங்களா லும் தன் ஆற்றலை வெளிக் கொணர்வது நாடகம்.

அபிநயங்களால் ஆட்களைக் கவராதவர் இல்லை மொழிபேசமுடியாத ஊமை தன் அபிந யத்தால் தன் கருத்தைப் புரியவைத்து விடுகின்ருன். அதேபோல் கேட்டு இன்பமுறமுடியாத செவிடன் அபிநயத்தைப் பார்த்து பரவசம் அடைகின்ருன். இந்த இயற்கை நிலையைத் தொகுத்து நோக்கின் காலத்தால் மூத்தது நாடகத் தமிழாகத்தான் இருக்கும் என்பதை சான்ருேர் மறுப்பதற்கில்லை.

இத்தகைய மூத்த கலையியல்பை, எனது மாணவர்கள், பலவருடங்கள் இயங்காது படுத்து விட்ட இக்கல்லூரி நாடக மன்றத்தை இயக்கி, அதன் மூலம் உள்ளங் கவரும் நாடகங்களைச் சமர்ப்பிப்பதனல் நீங்கள் கண்டு தெளியலாம். அந்த மாணவர்களின் வயது, அனுபவம் என்ற நிலையில் அவர்களது ஆக்கங்கள் உங்கள் மனதை கவரும் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை அதேவேளை இம்மாணவர்களின் இந்தத் தணியாத நாடகவேட்கை, இவர்களை எதிர்கால புரட் சிகர நடிகர்களாக, நீங்கள் பாடசாலையின் வெளி மேடைகளில் காண வழிவகுக்கும் எனவும் நான் நம்புகிறேன்,

உலகம் நாடக நடிகர்களின் கையில் அகப்பட்டு இருக்கும் காலம் இது. ஹொலிவூட் நடிகர்கள் முதல் சாதாரண நடிகர்கள்வரை அரசியல், பொருளாதார, சமூகத்துறைகளில் தன்ஞதிக்கம் செலுத்துகின்றனர். இந்த நிலையை எமது கல்லூரி மாணவர்கள் நாளைய எதிர் காலத்தில் பெறவேண்டும் என என இதயம் நிறைய வேண்டுகிறேன்.

சிறப்பியல்புள்ள இந்நாடக மன்ற உறுப்பினருக்கு வழிகாட்டும் பொறுப்பாசிரியராக இருப்பதிலும் அவர்கள் வெளியிடும் மலருக்கு இச் செய்தியை வழங்குவதிலும் ஆனந்தம் அடை கிறேன்.

''மாணவர்கள் எதிர்காலம் சிறப்பதாக''

உங்கள் அன்பின்,<br>
மா. கணபதிப்பிள்ளை,<br>
பொறுப்பாசிரியர்.<br>
'தமிழ் நாடக மன்றம்,

**With the best Compliments of:**

# New Sureka

JEWELLERS

139, SEA STREET
COLOMBO 11
Phone: 448092

*With best Compliments from:*

# Nidow Video Vision

351, SEA STREET

COLOMBO 11

# மாணவர் தலைவனின் இதயத் துடிப்பு

இனிதான இம்மாலையிலே இதமான இவ்வேளையினிலே உங்களை இன்புற வைக்கப் போகும் இந்நாடக விழாவினிலே நாடகமன்ற மாணவத் தலைவன் என்ற பதவியிலிருந்து உங்களை நான் சந்திப்பதில் மிக்க, மகிழ்ச்சியடைகிறேன்.

மேலும் நான்கு வருட கால இடைவேளையின் பின் றோயல் கல்லூரி தமிழ் நாடக மன்ற மாணவர்கள், தங்களின் அயராத உழைப்பின் பயனாக உருவாக்கிய இவ்விழாவையும், தங்களது சிறந்த ஆக்கங்களைக் கொண்டு தொகுத்த "நவரசத்தையும்" உங்கள் ,முன் சமர்ப்பிப்பதில் பெருமிதம் கொள்கிறோம்.

முக்கலைக்கும் சிறந்த வரவேற்பை அளிக்கும் இவ்வுலகினிலே தனக்கேயுரிய சிறப்பிடத்தை தமிழ் நாடகங்கள் பெறத் தவறி வருவதை நாம் நன்கு அவதானிக்கமுடிகிறது. அதுமட்டுமில்லாமல் தமக்குரிய சிறந்த வரவேற்பும் படிப்படியாக அருகி வருவதையும் நாம் க ணலாம். எனவே இவ்வாறான ஒரு காலகட்டத்தில் இவ்வாறான ஒரு விழாவானது இன்றியமையாததாகும்.

இதனடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலைகளுக்கிடையிலான நாடகப் போட்டியானது வளர்ந்து வரக்கூடிய கலைஞர்களுக்கு புதிய சந்தர்ப்பங்களை வாரிவழங்கும் என்றும் மேலும் பலபேரை ஊக்குவிக்கும் என்றும் திடமான நம்பிக்கை எமக்குண்டு. எனினும் ரசிகர்கள் இன்றேல் நடிகர்களில்லை. இதேபோல் நீங்கள் இல்லையானால் இவ்விழாவுமில்லை, இக்கலைஞர்களும்மில்லை. எனவே இவ்விளம் கலைஞர்களை நிச்சயமாக நீங்கள் வரவேற்பீர்கள் என நினைக்கிறேன்.

இறுதியாக இப்பாரிய விழா வெற்றியளிப்பதற்கு எனக்கு ஆலோசனை வழங்கிய அதிபர். திரு சூரியாராச்சி அவர்களுக்கும், என்றென்றும் எனக்கு வழிகாட்டியான பொறுப்பாசிரியர் மா· கணபதிப்பிள்ளை அவர்களுககும், ஏனைய பொறுப்பசிரியர்களுக்கும் தோளோடு தோள் நின்று தோள் கொடுத்த எனது சக மாணவர்களுக்கும் செயலாளர், இதழாசிரியர்கள் ஆகியோரிற்கும் எனது உள்ளங் கனிந்த நன்றிகளை தெரிவித்து விடைபெறுகிறேன்.

மு. அ. யூசுப்
*மாணவர் தலைவர்*

With best Compliments from:

A Well Wisher

கற்கக் கசடற கற்றவை கற்ற பின்

நிற்க அதற்குத் தக

Siva
Sri Murugan

With best Compliments from:

Hemas Drugs Limited.

( LABOURATORY DEPT )

36, BRISTOL STREET

COLOMBO - 1.

# செயலாளர் அறிக்கை

ஆய கலைகள் அறுபத்து நான்கிலும் நாடகக் கலை ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த கலையாகும். அதனால் தான் முத்தமிழின் ஒரு முக்கிய கூறாக நாடகக் கலை திகழ்கின்றது. எனவே தமிழ் நாடகக் கலையின் வளர்ச்சியானது, தமிழினது வளர்ச்சியின் மிக முக்கிய பங்காகும். பழம் பெரும் கலைஞர்களால் வளர்த்து மகுடமேற்றப்பட்ட தமிழ் நாடகக் கலையானது இன்று எமது இலங்கைத்திரு நாட்டைப் பொறுத்தளவில் வளர்ச்சியின்றி தேக்க நிலைக்குள்ளாக்கப்பட்டிருப்பது கவலைக்கிடமானதொரு உண்மையாகும். எனவே இக்கலையின் வளர்ச்சியில் பங்கேற்க வேண்டிய பொறுப்பு தமிழ் பேசும் அனைவருக்குமுரியதாகும்.

அந்த வகையில் மாணவர்கள் மத்தியில் நாடகக் கலையின் வளர்ச்சிக்குதவக் கூடியதாக எமது கல்லூரியில் தமிழ் நாடக மன்றம் இருப்பினும், 3 வருடங்களாகச் செயற்பாடுகளின்றிக் கிடக்கும் அம்மன்றத்தை. முழு அளவில் செயற்பாடுள்ள மன்றமாக மாற்ற வேண்டியிருந்தது. அதன் படி இவ்வருடம் ஜனவரி இறுதிப் பகுதியில் புதிய செயற்குழு தெரிவு செய்யப்பட்டது.

வழமையாக எமது கல்லூரியினுள்ளே இல்லங்கட்கிடையில் நாடகப் போட்டிகள் ஏற்பாடு செய்து நாடக விழாவை நடத்துவதாயினும் இம்முறை பரந்தளவில் நாடகப் போட்டிகளை நடத்தாத ஏற்பாடு செய்தோம். அதன் படி கொழும்பு மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நாடகப் போட்டிகளை நடத்தத் தீர்மானித்தோம்.

செயற் பாடிழந்த மன்றமொன்றைப் புதுப்பித்து உடனடியாகவே மாவட்ட ரீதியில் நாடகப் போட்டிகளை ஏற்பாடு செய்வதில் எமது உறுப்பிணர்கள் பலரும் பல தியாகங்களைச் செய்ய வேண்டியிருந்தது இன்று நாடகப் போட்டிகள் சகலதும் நடை பெற்று இறுதிப் போட்டியாக நாடகங்களை அரங்கேர வைத்து 'நாடக விழா' வெகு விமரிசையாக நடைபெறுவது, எமது மன்றத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய தொன்றாகும்.

மாணவர் தலைவரின் நேரிய வழி நடத்தலிலும், எமது உறுப்பினர்களின் கடும் உழைப்பினாலும், ஆசிரியர்கள். பெற்றோர்கள் ஆகியோர்களின் உதவிகளினாலும், மேலான ஆலோசனைகளினாலுமே இன்று இவ்வளவு சிறப்பாக விழாவை நடத்த முடிந்ததையிட்டு அவர்களுக்கு எனது நன்றிகள்.

'நாடகத் தமிழிதை நயமாய் வளர்த்திட
நாடுவோம் ஒற்றுமை, கூடுவோம் ஒன்றாய்''

நன்றி.

எஸ். என். யூ. முஹமட் உடயார்.
செயலாளர்

# A Well Wisher

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு

# Well Wisher

அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்

Selvarasa Khaithadi

# ஆக்கியோர் எண்ணக் கரு

தித்திக்கும் தேன் தமிழின் உயிர் நாடியாக விளங்கும் நாடகக் கலைக்கு ஆண்டு தோறும் விழா எடுக்கும் ஹேயல் கல்லூரித் தமிழ் நாடக மன்றம் 'நாடக விழா 91'ஐ உங்கள் முன் மேடையேற்றும் இவ் இனிய வேளையில் நவரசங்களும் பொருந்திய நவரச மலரை உங்களுக்கு அளிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

எமது சக்திக்கு அப்பாற்பட்ட நாட்டின் அசௌகரிய நிலமை காரணமாக கடந்த ஒரு சில ஆண்டுகளில் இம்மலர் வெளிவராததையிட்டு வருந்துகிறோம். இம் முறையும் பல சிரமங்களுக்கு மத்தியில் மலரும் இந்நூல், பல சிறப்புப் பொருந்திய அம்சங்களுடன் தொடர்ந்து வெளிவரும் என்பதில் சந்தேகமில்லை.

இவ் அழகிய பொன்மாலைப் பொழுதில், பொன்னான உங்கள் கரங்களில் தவழும் இந்நூல் மிகக் குறுகிய காலத்தில் செய்யப்பட்டது ஆயினும், நம் கல்லூரியைச் சேர்ந்த இளம் கலைஞர்களின் தரமான ஆக்கங்களை வெளியிடக் கூடியதாக இருந்தமை மனத்திற்கு ஆறுதல் அளிக்கக் கூடியதாக உள்ளது.

இந்நூலை சிறப்புப் பொருந்தியதாக அமைப்பதற்கு வழிகாட்டிய பொறுப்பாசிரியர்க்கு பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்.

சிறியோர் நாம் குறையாக விட்ட குற்றங்களை, பெரியோர் தாங்கள் குறிப்பறிந்து மன்னிப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு உங்கள் நல்லாசியையும், நல்லாதரவையும் வேண்டி விடைபெறுகிறோம்.

ருஸ்தி அமீர்
கணேஷராஜா அமுதன்
அப்துல் பாரி

With best Compliments from:

# *Multie Traders*

DEALERS IN TEXTILES

No. 77. MAIN STREET
COLOMBO 11.
T. P' 432644

**With the best Compliments of**

# MIRA EXPORTS CO. (PVT) LTD.

MANUFACTURES OF QUALITY EXPORT GARMENTS

Head Office:
57, Norris Cannel Road
Colombo 10

Factory:
417, Galle Road.
Ratmalana

With best Compliments from:

# INTER ASIA MOTORS

Importers and Distributors of Motorcycle
Spare Parts

3, Jayantha Weerasekara Mawatha
Colombo-10

**ASIA PRINTERS**
317 A. Jumma Masjid Rd.
Colombo - 10

**ASIA ENTERPRISES**
P 24, Jayantha Weerasekara
Mawatha, Colombo - 10

T. P. 687149, 692509

With best Compliments from:

# TELEMECANIQUE

- PLUG IN BASBAR TRUNKING
- COMPLETE AUTO ATION PRODUCTS
- MOTOR CONTROLS & STARTERS
- PROGRAMMABLE LOGIC CONTROLLERS

## ELECTRO - SERV - (PVT) LTD.

235/2, GALLE ROAD,
COLOMBO - 4.

Telephone: 580287, 582484

# நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| பி. ப. | 4. 30 | - பிரதம அதிதியின் வருகை |
| பி. ப. | 4. 35 | - மங்கல விளக் கேற்றல் |
| பி. ப. | 4. 40 | - தமிழ் வாழ்த்து |
| ,, | 4. 45 | - தலைவரின் வரவேற்புரை |
| ,, | 4. 50 | - ரோயல் கல்லூரியினரின் சிறப்பு நாடகம் |
| ,, | 5. 05 | - அதிபர் உரை |
| ,, | 5. 10 | - அம்மா பசிக்குது |
| ,, | 5. 30 | - வேதாந்தக் குயில் |
| ,, | 6. 00 | - பிரதம அதிதியின் உரை |
| ,, | 6. 10 | - ஜான்சியின் செல்வம் |
| ,, | 6. 35 | - இடைவேளை |
| ,, | 6. 45 | - பீஷ்மர் நாடகம் |
| ,, | 7. 10 | - திருந்திய உள்ளம் |
| ,, | 7. 35 | - தென்றல் புயலானது |
| ,, | 8. 00 | - பிரதான பேச்சாளரின் உரை |
| ,, | 8. 15 | - பரிசளிப்பு |
| ,, | 8. 30 | - நன்றியுரை |
| ,, | 8. 45 | - தேசிய கீதம் |

## Programme

4 30 p. m. Arrival of Chief Guest
4.35 p. m. Lightning of oil lamp
4.40 p m. Tamil Valthu
4.45 p. m. Welcome Speech by Studendt Chairman
4 50 p. m. Guest Drama by Royal college
5.05 p. m, Principal's Speech
5.10 p m. Amma Pasikkuthu
5 30 p. m. Vethantha kuil
6.00 Chief Guest's Speech
6.10 p. m, 'Jansyin Selvam'

6.35 p. m. INTERVAL

6.45 p. m. "Beeshmar"
7.10 p. m. "Thirunthiya Ullam"
7.35 p. m. 'Thendral Puyalanadhu'
8 00 p. m. Guest Speakers's Speech
8.15 p. m. Prize Giving
8. 30 p. m. Vote of Thanks
8 45 p. m National Anthem

With best Compliments from:

Visit

# KATPAHAM

Palmyrah Based food, Handicraft &
Regional Products

at

244, Galle Road,

Colombo - 4.

Branches : Jaffna, Mannar, Vavuniya,
Batticaloa, Trincomalee,
Puttalam and Hambantota

**With the best Compliments of**

★

# HASMARS TEX

( Retail Dealers in: Textiles Goods )

No, 1, 1st COROSS STREET
CHILAW

# உலகமே நாடகம்

உலகமே ஒரு நாடக மேடை — அதில்
உள்ளவர் யாவரும் நடிகர்களே
முயற்சி உடையவர் வெற்றி அடைவார்
முடங்கி கிடப்பவர் அடங்கிப் போவார்

மனத்திலுள்ளதை மறைந்து கிடப்பதை
மாந்தரும் அறிந்திட — மாந்தி சுவைத்திட
இனிக்க இனிக்கவே இனிமை சுரக்கவே
இன்புறவே நல்ல நாடகம் வேண்டும்.

கம்பரின் இராமாயணமும் நாடகம்
ஹோமரின் இலியட் கதையும் நாடகம்
வில்லிப்புத்தூரரின் வியக்கும் கதையும்
நாட்டியமென்னும் நாடகம் தானே
வாரீர் நாடகம் கண்டிடவே
தாரீர் நல் வரவேற் பதிலே.

**எஸ். எம். ரியாஸ்**

ஆண்டு 11 R
றோயல் கல்லூரி.


*With best Compliments from:*

**RUNMINKA GEMS & JEWELLERS**

MANUFACTURERS IMPORTERS & EXPORTES
OF SRI LANKA PRODUCIS

557, Galle Road. Mount Lavinia. Sri Lanka.

Telephone: 713540, 725037

Telex: 22947 Crown CE Attn Stan

Fax: 0094-1 722992 Attn Stan

**With the best Compliments of**

# HAVELOCK INTERIORS

**Professional in Curtaining Aluminium Box Type Curtain Rails**

**& Sewing of Pleated Curtain**

515, HAVELOCK ROAD.
COLOMBO 6
Phone: 503735

With best Compliments from:

★

# Takara Enterprise

WHOLESALE & RETAIL DEALERS IN:

TEXTILES, ELECTRICAL GOODS AND FANCY COODS ETC.

Favourite Super Market.
128 - 1/1 - J/9, Keyzer Street
First Floor - Colombo 11.

Office Phone: 21089
Residence Phone: 691732

## றோயல் கல்லூரி தமிழ் நாடக மன்றம் நடாத்தியநாடகப் போட்டியில்

## பங்கேற்ற பாடசாலைகளும் நாடகங்களும்

| பாடசாலைகள் | நாடகம் |
|---|---|
| புனித பிரிட்ஜட்ஸ் கல்லூரி | அம்மா பசிக்குது |
| புனித தோமஸ் கல்லூரி | வேதாந்தக் குயில் |
| புனித பேதுரு கல்லூரி | ஜான்சியின் செல்வன் |
| புனித அன்னம்மாள் கல்லூரி | பீஷ்மர் |
| திருக்குடும்பக் கன்னியர் மடம் | திருந்திய உள்ளம் |
| மெதடிஸ்ட் கல்லூரி | தென்றல் புயலானது |

PLEASE

PATRONIZE

# OUR ADVERTISERS

**With the best Compliments of:**

# SHANMUGA AGENCIES

Commission Agents

No. 45, 4th CROSS STREET
COLOMBO 11

Phone: 438467 421943

With best Compliments from:

★

# Ceylon Electricity Board

COMMERCIAL DIVISION

Help Save Valuable Electrical Energy by Using Fluorescent Lamps

FLUORESCENT LAMPS:

- Give Brighter Lights
- Last Longer
- Consume Less Electrical Energy and you will get Lighter Bills

# நாடகத்தின் சிறப்புக் கூறுகள்

(அ) ஒருமைப்பாடு: பல நாளைய நிகழ்ச்சிகளை குறிப்பிட்ட சில மணி நேரத்திலே தொடர்ந்து வருமாறு கோவைப்படுத்துவது நாடகத்தின் ஒரு சிறப்பியல்பாகும். இதனையே நாடகத்தின் ஒருமைப்பாடு என்பர். குறித்த ஓர் இலக்கை நோக்கியே நாடக மாந்தரும், காட்சிகளும், நிகழ்ச்சிகளும், உரையாடல்களும் இயக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு இயக் கப்படுவதாலேயே நாடகத்தில் ஒருமைப்பாடு உண்டாகும். இந்த ஒருமைப்பாடு இல்லை யானால், பார்வையாளர் மனத்திலே விரசம் உண்டாகிவிடும்.

(ஆ) நிகழ்ச்சிக் கோப்பு: நாடகத்தில் அடுத்தபடியாக முதன்மை பெறுவது நிகழ்ச்சிக் கோப்பு. கதை வளர்ச்சிக்கு அத்தியாவசியமான நிகழ்ச்சிகளை கருத்தோடு தெரிவு செய்து, கோவைப்படுத்துவது நாடகாசிரியரின் திறமையைக் காட்டும். வேண்டாத நிகழ்ச்சிகளை நீக்கி விடுதல் வேண்டும். நிகழ்ச்சிகளே கதையை வளர்த்து வருவன. கதை வளர்ச்சியை ஒட்டியே பாத்திரங்களின் குணசித்திரங்கள் புலப்படுத்தப்படும். நிகழ்ச்சிகள், தொடக்க நிலையிலி ருந்து படிப்படியாக வளர்ந்து உச்சகட்டத்தை அடைந்து, திடீரென முடிவை நோக்கி இறங்கு வதே நாடக இலக்கியங்களின் பொதுவான இலக்கணமாகும்.

தொடக்கக் கட்டத்திலே நாடக பாத்திரங்கள் அறிமுகஞ் செய்யப்படும். களம் விவ ரிக்கப்படும்; நாடகக் கலையின் பிரச்சினை அல்லது முரண் தோற்றுவாய் செய்யப்படும். இரண்டாவதான வளர்ச்சிக் கட்டத்திலே நிகழ்ச்சிகள் சிக்கலாகி விறுவிறுப்பாக உச்சகட் டத்தை நோக்கி நகர்ந்து செல்லும். கதையின் வளர்ச்சி பார்வையாளரின் விளைவறிவேட் கையை முடுக்கி விடுவதாயிருப்பது சிறந்த நாடகத்தின் இயல்பு. மூன்றுவது கட்டமே உச்ச கட்டம். இந்த நிலையை அடைந்ததும் விரைவிலேயே நாடகத்தை முடிவுக்குக் கொண்டு வருதல் வேண்டும். இங்கே சிக்கல் அவிழ்ந்து பார்வையாளரின் மனவலிப்பினைத் தளர்த்தி விடும். முடிவு பார்வையாளர் எதிர்பார்த்ததாகவும் இருக்கலாம், எதிர்பாராததாகவும் இருக் கலாம். நாடகக் கலை வளர்ச்சியோடு ஏறி ஏறி உச்ச நிலைக்குப் போன பார்வையாளரின் உணர்ச்சி, மீண்டும் சமநிலைக்கு வரும் போதே, மனநிறைவு உண்டாகும். இன்ப முடிவாயி னும், அவல முடிவாயினும், 'நல்லதொரு நாடகத்தைப் பார்த்தோம்' என்னும் திருப்தி பார் வையாளர் மனத்திலே உண்டாதல் வேண்டும்.

இ. பாத்திர வார்ப்பு: நாடகத்தின் அடுத்த முக்கிய அம்சம் பாத்திர வார்ப்பு ஆகும். எடுத்துக்கொண்ட கதையையோ, கருத்தையோ, பார்வையாளர் உள்ளத்தில் முழுமை உணர்ச்சி தோன்றுமாறு விளக்குவதற்குப் பாத்திரங்களே துணைபுரிகின்றன. ஆகவே பாத் திர வார்ப்பில் நாடகாசிரியன் மிகுந்த கவனஞ் செலுத்த வேண்டியவனாகிறான். ஒவ்வொரு பாத்திரமும் தனக்கெனச் சிறப்பான தனிஇயல்பு பெற்றிருப்பது முக்கியமானது. ஒருபாத்திரம் மேடையில் முதன் முதலாய்த் தோன்றும் போது பார்வையாளரின் மனதில் உண்டாக்கும் தாக்கமே நாடகம் முடியும் வரை திளைத்திருக்கும் ஆதலால், ஒவ்வொரு பாத்திரமும் மேடை யில் முதலில் தோன்றும் போதே தன் குணச்சித்திரத்தைச் சரியாக வெளிப்படுத்த வேண்டும். பாத்திரத்தின் குணச்சித்திரத்துக்கும் கதை நிகழ்ச்சிகளுக்கும் முரண்பாடு இருத்தல் ஆகாது.

(ஈ) உரையாடல்:- பாத்திரங்களின் குணச்சித்திரம் வெளிப்படுவதற்கு முக்கியமாக உதவுவது உரையாடலேயாகும். அதுவே நாடகத்தின் உயிர் நாடியுமாகும் இந்த உரையாடல் பாத்திரத்திற்கு ஏற்றதாகவும் விறுவிறுப்பாகக் கதையை நடத்திச் செல்வதற்கு வேண்டிய அளவினதாகவும் இருத்தல் வேண்டும் பொதுவாக, மேடையிலே வந்து பாத்திரங்கள் நீண்ட சொற்பொழிவை நிகழ்த்துவது பார்வையாளருக்கு சலிப்பை ஊட்டி விடும், இன்றியமையாத கட்டங்களில் அன்றி ஏனைய இடத்திலெல்லாம் உரையாடல் சுருக்கமானதாகவும் இயல்பாகவும் அமைதல் வேண்டும். பார்வையாளர் கேட்ட மாத்திரத்திலே பொருள் விளங்கிக் கொள்ளுதல் நாடக நயப்புக்கு இன்றியமையாதது; பாத்திரங்கள் பேசும் மொழிநடை எளிமையும் தெளிவு வாய்ந்தனவாய் இருத்தல் வேண்டும். பாத்திரங்களின் குணவியல்புகளுக்கும் உணர்ச்சிகளுக்கும் பொருத்தமான சரளமான மொழிநடை பார்வையாளரின் கருத்தை நாடக நிகழ்ச்சிகளில் ஈர்த்து வைத்து இன்பம் பயக்கும்.

ஆக்கியோர்
யூ. எல். எம். பௌமி
சிவதர்சன்
ஆண்டு 12 L


*With best Compliments from:*

**Mira Export Co. (pvt) Ltd.**
(MANUFACTURERS OF QUALITY EXPORT GARMENTS)

Head Office:
57, Norris Canal Road,
Colombo-10.

Factory
417; & 2A, 1st Lane,
Ratmalana.

## நாடகத்தமிழே ! நீ என்றும் வாழ்க வாழியவே

மூவகை முத்தமிழில் மதிப்புடை
முத்தாய் மலர்கின்ற நாடகத்தமிழே நீ
முன்னேறி முன்வருவாய் மானிடர் மத்தியிலே
முதலோனைத் துதிக்கிறேன் உனக்காக!

கதைப்பதற்கோர் மொழியின்றி காடையராய் வாழ்ந்த
கதியற்றோர் மத்தியிலே கலைவளர்த்த நாடகத்தமிழே
கண்ணுக்குக் கவர்ச்சியையும் காதிற்கு கருத்தினையும்
கற்பித்த நீ என்றென்றும் வாழ்க வாழியவே!

தமிழுக்கு மெருகூட்டி கலை அன்னைவாழ வழிகோலிய
தமிழ் நாடகமே நும்பணியை மறப்பதற்கு
தயங்குகிறதே என்னிதயம் உன்
தயவால் தமிழ் தலைதூக்கிற்றே வளர்க நீ!

கலாச்சாரத்தின் கோமகளாய்த் தமிழையும்
கணக்கின்றிப் புதைந்திருந்த கருத்துக்களையும்
காரிருள் புகுந்திருந்த இப்புவிக்கு கவனத்துடன்
கறந்தளித்த நாடகத்தமிழே நீ வாழியவே!

தான்தோன்றித்தனமாய் மண்மீது அங்குமிங்கும்
தாவித்திரிந்த திக்கற்ற மனிதர்களை கவனத்துடனேயே
தாபித்த மொழியாலே விகரமதில் வாழவைத்தாயே
தாளாத உன் செயல் நினைக்காதிருப்போமோ?

விருத்தரையும் பாலரையும் அன்றிப்பலகோடி
விஞ்ஞான மெஞ்ஞான கருத்துளோரையும்
வியக்க வைத்த உன் புகழைப் பாடத்தான் இயலுமோ
விரிவுடனே உன் உயர்வு உலகெங்கும் பரவட்டும்.

புனைந்தவர்

**கவிவர்ணன் - எம். ஏ. ஆஷிக்**

**ஆண்டு 10 R**

**றோயல் கல்லூரி - கொழும்பு 7.**

உ சிவமயம்

''சாமியே சரணம் ஐயப்பா''

# றோயல் கல்லூரி

## தமிழ் நாடக மன்றம் நடாத்தும்

தமிழ்ப் பாடசாலைகளுக்கிடையிலான
"தமிழ் நாடகப் போட்டி"
தரமுடன் நடைபெற்று
தரணி எங்கும் போற்ற
எம்பெருமானாகிய தர்மசாஸ்தாவைப்
பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.



சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் உபாசகர் சபரி பூஜா பூஷணம் - மேல்சாந்தி - குருஸ்வாமிகள்.
பிரம்மஸ்ரீ சாஸ்தாதாஸன் பீடாதிபதிகள் தலைவர்: அகில பாரத ஐயப்பன் சேவா சங்க இலங்கை
கிளை சிவாச்சார்ய சமூக நல சமாஜம் பீடாதிபதிகள்: அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ ஐயப்பன்
சேவா பீடம் ஆதின கர்த்தா; ஸ்ரீ ஞான பைரவர் தேவஸ்தானம் தலைமை செயலகம்
42, டிவாஸ்லேன், கொழும்பு - 14
தொ. இல:- 4 2 3 8 9 5

சாமியே சரணம் ஐயப்பா

# தமிழ் நாடகக் கலை

பழந்தமிழ் நாடகங்கள் முத்தமிழையும் ஒன்றாகக் கொண்டு இயங்கின. இயற்றமிழையும், இசைத்தமிழையும் அபிநயத்துடன் வெளியிடுவதே நாடகமாக இருந்தது. பண்டைக் காலத்தில் பண்ணை இசைத்தவர் 'பாணர்' எனவும், நாடகத்தை நடித்தவர் 'கூத்தர்' எனவும் அழைக்கப் பட்டனர் அக்கால நாடகங்களில் உரைநடை காணப்படவில்லை, இசைத்தமிழை மட்டும் கொண்ட கூத்தாக அவை அமைந்திருந்தன மிகப்பழங் காலத்தில் நாடகங்கள் நடத்துவதற்கு என்று அரங்குகள் இருக்கவில்லை. வீதிச் சந்திகளிலும், மக்கள் கூடும் இடங்களிலும், விழாக்களின் போதும் மக்களை மகிழ்விக்க நாடகங்கள் நடத்தப்பட்டன. அரசவைகளில் நாடகம் நடத்திய வர்கள் மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றிருந்ததுடன், மன்னர்கள் வள்ளல்களால பாராட்டப் பட்டுப் பரிசில்களும் வழங்கப்பட்டனர். மக்களுக்கெனவும், மன்னருக்கெனவும் வெவ்வேறு வகையான நாடகங்கள் நடாத்தப்பட்டன.

நாடக வரலாற்றில், இளங்கோ அடிகளின் தோற்றமும், அன்னாரது சிலப்பதிகாரக் காப்பியமும் ஒரு திருப்புமுனையாக அமைந்தன. சிலப்பதிகாரக் காவியம் நாடகக்கலைக்கு ஓர் இலக்கணமாகவே அமைந்தது. அதன் காரணமாக உரைநடையுடன் கூடிய நாடகம் நடைபெற ஆரம்பித்தது அதற்கு வழிகாட்டியாக இளங்கோ அடிகளின் சிலப்பதிகாரக் காவியமே அமைந்தது எனலாம் அவர் தமது முன்னுரையில்,

''அரசியல் பிழைத்தோர்க்கு அறமே கூற்றுவதும்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏற்றுவதும்
ஊழ்வினை உறுத்து வந்தூட்டும் என்பதும்
சூழ்வினைச் சிலம்பு சில காரணமாக நாட்டுதும்
யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்''

எனக்கூறி அறிமுகம் செய்வதிலிருந்தே பாடல்களுடன் உரைநடையும் கலந்து இயற்றப்பட்ட காப்பியம் சிலப்பதிகாரம் என்பது புலனாகிறது. ஒரு நாடகத்தில் அதன் கருப்பொருள், கதாபாத் திரங்கள், ஒப்பனை. நாடகஅரங்கு என்பன எவ்வாறு அமைதல வேண்டும் என இலக்கணம் வகுத்தவர் இளங்கோ அடிகளாவார்.

அவருக்கு வெகுகாலத்தின் பின் உதித்த வ. வே. சு. ஐயர் இயற்றி வழிகாட்டிய நாடகங்களில் உரைநடை மேலும் அதிகரித்தது. ஆயினும் இசையும் நியாயமான அளவு அவற்றில் இடம்பெற்றிருந்தன. அதைத் தொடர்ந்து நாடக மன்றங்கள் பலதோன்றி நாடகக்கலையை வளர்த்து வந்தன. நம்நாட்டில், கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் சேவை இத்துறையில் குறிப்பிடத் தக்கது.

இவ்வாறாக வளர்ந்து வந்த நாடகம் நவீன விஞ்ஞான முன்னேற்றங்களின் பயனாகத் திரைப்படமாக மறுரூபம் பெற ஆரம்பித்தது. பின்னர் பாரிய வெண் திரைகளையுடைய பட மாளிகைகளில் பலதரப்பட்ட நாடகங்கள் திரைப்படமாகத் தயாரிக்கப்பட்டுக் காட்டப்பட்டன. இவ்வகைத் திரைப்படங்களைத் தமிழில் தயாரிப்பதில் முன்னணியில் நின்றது தென்இந்தியா என்பது குறிப்பிடத்தக்கது இத்திரைப்படம் மூலம் காட்டப்படும் நாடகங்களில் உரைநடையுடன்

பாடல்களும் கலந்து காணப்படுகின்றன, திரைப்படங்கள் மக்களிடம் சிறந்த வரவேற்பைப் பெற்றதால் மேடை நாடகங்கள் அருகி வர ஆரம்பித்தது. ஆயினும் சில நாடகமன்றங்கள் பலவகை இன்னல்களிடையே தொடர்ந்தும் நாடகங்களை நடத்தி வருகின்றன.

திரைப்படங்கள் எவ்வளவு முன்னேறி இருப்பினும் தமிழ் நாடகங்களை மேடையில் காண்பதில் இரசிகர்களுக்கு உள்ள ஆர்வம் அன்று முதல் இன்று வரை குறைவின்றி இருந்து வந்துள்ளது. அதனால் தற்கால மேடைநாடகங்கள் பலவகைகளில் மக்களைக்கவரத்தக்க நவீன மாற்றங்களுடன் நடத்தப்படுகின்றன. சிறப்பாக 'மனோகர்' நாடகமன்றம் நடாத்திவரும் நாடகங்களை குறிப்பிடலாம் சில நாடகங்கள் இயல், இசை என்பவற்றுடன் கூடிய பண்பு முறையைப் பின்பற்றுகின்றன. அவை, 'மரபுவழி நாட்டுக்கூத்து' என வழங்கப்படும் இலங்கையில் மன்னார், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், வன்னிப் பிரதேசங்களில் அவை வடமோடி, தென்மோடி என்ற இரு மரபுவழிகளில் நடத்தப்படுகின்றன. பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள் அச்சிட்டு வெளியிட்ட 'என்றிக்கு எம்பரதோர்' நாடகம் அவற்றுள் முக்கியமான ஒன்றாகும்.

இக்கால நாடகங்களுள் சில உரைநடையை மட்டும் கொண்டன அவற்றுட் சில ஓரங்க நாடகங்களாக அமைந்திருப்பதும் உண்டு. எது எவ்வாறிருப்பினும் தமிழ் நாடகங்கள் மக்களிடம் பெற்றுள்ள நன்மதிப்பு இன்னும் முற்றாக அற்றுப் போய்விடவில்லை. இதைச் சாதகமாகக் கொண்டு பழந்தமிழ்க் கலையாகிய நாடகக்கலையைக் காத்து வளர்ப்பது தமிழ் மக்களது தலையாய கடமையாகும்.

வாழ்க தமிழ்! வளர்க நாடகக்கலை!!

இ. இளங்கோ பொன்னையா
ஆண்டு 10

With best Compliments from:

**Karimbhoy Bagsoobhoy Limited**


ESTD. 1912

Importers & Exportars

Commision Agents

Office:
109 Fourth Cross street
Colombo 11
Sri Lanka
Phone 24677 23588
T. Grams "KHETY"
Fax 24677

## With the best Compliments of:




**ABTHEEN**
FASHIONABLE GENTS TAILORS

257/1 - C Galle Road
(opp Police Station)
Colombo 6

Wedding Suit
Sarwani Suit
Safari Suit
Jeans-Shirt and
Modern types of
Tailoring design by experienced tailors

வெடிங் சூட்
சர்வாணி சூட்
சபாரி சூட்
ஜீனஸ் சேட் மற்றும் தற்கால நாகரீகத்திற்
கேற்ற முறையில் ஆடைகளை தைத்து கொள்ள
அனுபவம் நிறைந்த தையல் ஸ்தாபனத்திற்கு
இன்றே நாடுங்கள்.

---

*With best Compliments from:*

# Lanka Vinyl Ltd.
# Vinyl Products (Pvt) Ltd.

Manufacturers & Exporters of P. V. C. Leather Cloth, Sheeting, Film & Carpets
Orders accepted for the Manufacture of any Colour & disign of the above
SHOES / TRAVEL BAGS / DIARY COVERS
SHOWER CURTAINS / UPHOLSTRY CAR CARPETS
PHOTO ALBUMS ETC.

Factory:
83 Maithree Mawatha
Ekala, Jaela
T. P:- 536829

INQUIRIES
20180, 435006
208 SEA STREET Colombo - 11
Telex :- 22871 VINYLCE

*With best Compliments from:*

# JAYA NITHYIAKALYANI JEWELLERY

Makers of Genuine 22ct

Gold Jewelleries, Pawn Brokers

69, Sea Street
Colombo 11.

Phone: 436923 28536


*With best Compliments from:*

# *Nisaan Printers*

Offset & Letter Press
General Printers, Stationers & Publishers

64, Peer Saibo Street
Colombo 12.
Phone: 435556

# "NADAGA VIZHA" COMMITTEE AND THE ORGANIZING COMMITTEE



## Seated

From Right to Left: Mrs. S. A. Gopalan (Vice President) A. L A. Bary (Editor) S.G. Amuthan (Editor), M.R. Rusdhy Ameer (Chief Editor) S.N.U.M. Udayar (Secretary), B. Suriarchchi (Principal), M. A. Yoosuf (Student's Chairman), K. Suresh Kumar (Treasurer), B. Chandrapragash (Assistant Secretory), E. G. J, Vethanayagam (Assistant Tresurer), Mr. M. Kanapathipillai (Teacher in Charge).

## Standing: First Row

M. M. Yoosuf, G. Ramanan, A. L. M. Thahir, S. Rajkumar, T. Varun Balandra, Rodney Balasingham, M. J. M. Irfan, S. N. Asheer, K. Naresh Kumar, K. Sadeesh Kumar, S. Ahamed Shakeel.

## Second Row

S. Sujeev, T. Sivaharan, M. Kumar, A. M. Silmy Ahamed. V. Manoharan, I. Dev Shanker, T. A. Johnson, S. M. S. M. Aqram, M. L. A. Ashkar, I. M. Intikab, D Shanthakumar.
Absent: A. Naranthiran.

With Best Compliments:

# O. A. Paramasivan Pillai & Son

GENERAL MERCHANTS, IMPORTERS & EXPORTERS

128, Fourth Cross Street,
COLOMBO - 11

T. P. 25932 & 545113
T. grams:- 'OYAPEE"

With Best Compliments: from:

# DIMPLES

Dealers in Ladies & Kiddies needs

41, GALLE ROAD BAMBALAPITIYA
Opposite Station Road

# சிறப்பு விருந்தினரின் ஆசிச் செய்தி

மாணவர்களின் இயல்லூக்கங்கள் வளருவதற்கு இன்றியமையாத மூலவிசை பாடசாலை களிலேயே இடப்படவேண்டும். பாடசாலைகளில் அல்லது கல்வி நிறுவனங்களில் செவ்வனே புடமிடப்பட்ட மாணவர்களே சமூதாயத்தினதும் நாட்டினதும் மனச்சாட்சியாக மாறுகின்றார்கள்.

''ஆடுதல் பாடுதல்- சித்திரம் கவி ஆகிய கலைகளில் உள்ளம் ஈடுபட்டென்றும் நடப்பவர் பிறர் ஈன நிலை கண்டு துள்ளுவார்'' என்ற மகாகவி பாரதியின் பாடல் கலைகளின் வலுவையும், அவை மனிதமனங்களில் ஏற்படுத்தும் உணர்வையும் துல்லியமாகக் சுட்டிக்காட்டுகின்றது.

றோயல் கல்லூரி இந்த நாட்டின் அதியுன்னத கல்வி நிறுவனங்களில் ஒன்றாகும், ஏறத்தாழ ஐம்பத்தி மூன்றாண்டு காலப் பழமை வாய்ந்த றோயல் கல்லூரி தமிழ் நாடக மன்றம் கல்லூரிப் பாரம்பரியங்களின் அனுசரணையோடு கலை வளர்ச்சியின் ஊற்று கோலாக விளங்கி வந்தமையைப் பழைய மாணவர்கள் அல்வப்போது நினைவு கூருவதுண்டு குறுகிய இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் தமிழ் நாடக மன்றம் கொழும்பு மாவட்ட பாடசாலைகளை உள்ளடக்கிய நாடக விழாவை ஏற்படுத்தியுள்ளமை பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும்.

மாணவர்களின் ஆற்றல்களை மெருகிடும் வகையிலே கல்லூரிகளில் இலக்கிய மன்றங்களும், கலைமன்றங்களும் மற்றும் சங்கங்களும் அமைக்கப்படுதல் இன்றியமையாமையைக் கல்வியமைச்சு அடிக்கடி பாடசாலை மட்டத்தில் உறுதிப்படுத்த வேண்டும். நாடளாவிய நிலையிலே பாடசாலைகள் மூலம் கலையுணர்வும் இலக்கிய உணர்வும் நெறிப்படுத்தப் படும் போதுதான் மாணவ நெஞ்சங்களில் சமுதாயப் பிரக்ஞையை வேரூன்றிவைக்க முடியும்.

மாணவர்கள் வெறும் புத்தகப் பூச்சிகளாக மட்டுமிருக்கக் கூடாது. வகுப்பறைகளின் நான்கு சுவர்களுள் சிறைப்பட்டிருக்கின்றோம் என்ற உணர்வு மாணவர்கள் நெஞ்சங்களில் வேரூன்றக் கூடாது. பாடவிதானங்களுக்கும் புறம்பாக இளம் நெஞ்சங்களின் ஆற்றல்கள் துலங்கும் வகையில் பாடசாலைகளில் நிகழ்ச்சிகள் நடைபெற வேண்டும்.

இன்று இளைய தலை முறையினரின் நெஞ்சங்களில் வேரூன்றியுள்ள விரக்தி நிலை சரியான வழிகாட்டல்களும் அமைப்புகளும், முறைமைகளும் இல்லாமையால் உருவானவை. மனிதமனங்கள் ஆறுதலைப் பெறுவதற்குரிய வழியில் அழகுக்கலைகளில் ஈடுபாட்டை ஏற்படுத்தும் போது நம்பிக்கையும், உறுதியும் வளரும் என்ற உண்மையை நாம் மறந்துவிடலாகாது.

''பிறர் ஈனநிலை கண்டு துள்ளும்'' பக்குவம் வாய்ந்த நெஞ்சங்களை உருவாக்கும் வழியில் றோயல் கல்லூரித் தமிழ் நாடகமன்றம் நாடக விழாவை நடாத்த முன்வந்தமை பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும்

இந்த நாடக மன்றத்தின் இயக்கத்திற்கு பின்னணியாக விளங்கும் அதிபரும் ஆசிரியர் குழாமும் மாணவ நெஞ்சங்களைப் பக்குவப் படுத்தும் பணி பாராட்டிற்குரியது.

185, கிராண்பாஸ் வீதி
கொழும்பு - 14

ஆ. சிவநேசச் செல்வன்
பிரதம ஆசிரியர்
வீரகேசரி/ மித்திரன்

# BANK OF CEYLON

WITH BEST WISHES FROM:

BANK OF CEYLON

BANKERS TO THE NATION

SAVE WITH BANK OF CEYLON
OPEN A CHILDREN'S ACCOUNT

---

With best Compliments from:

# GAYA JEWELLERIYS

(Expert Workmanship and Guaranted 22ct Gold)

163, GALLE ROAD, BAMBALA,
COLOMBO - 4.

Telephone: 584628

# சங்க இலக்கியங்களில் நாடகம்

கல் தோன்றி மண் தோன்றா காலத்திலே, மரங்கள் செழிக்க பசுஞ் சோலை தோன்ற, மிருகங்கள் தள்ளி ஓடா அழகிய வனத்திலே வேட்டுவனாக தோன்றினான் மனிதன்.

பிறந்தாள் தமிழ்த்தாய், தமிழ்த்தாயை மெருகூட்ட தோன்றியதே ஐம்பெருங்காப்பியம். ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றே சிலப்பதிகாரம். இக்கதையில் மாதவியை ஒரு நடன மாதுவாகக் காட்டி சங்க காலத்தில் நாடகக்கலை எவ்வாறு வளர்ச்சி அடைந்திருந்தது என்பதைப் பற்றி விளக்கியுள்ளார் இளங்கோவடிகள். நாடகக் கலையை பற்றி.

''நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடிக்கக்
காட்டின ளாதகன்''

என சிலப்பதிகாரத்தின் இறுதியிலே கூறப்பட்டிருக்கின்றது. முத்தமிழ் காப்பியமான சிலப்பதிகாரத்திகாரத்தின் இடையிலே சிவபிரான் நடிப்பை (நடனத்தை) பற்றியும் ஓரிடத்தில் கவிஞர் ஆற்றலாகவும், அடிகராகவும் விளக்கியுள்ளார். இவ்வாறு சங்க இலக்கிய நூலில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் நாடகத்தின் கலையைப் பற்றி, நாடகத்தின் சிறப்பம்சத்தை பற்றி உள்ளங்கை நெலிக்கனி போல தெளிவாகவும், அழகாகவும், வாசிப்பவர்கட்கு பரவசம் ஊட்டும் வகையில் திகழ்கின்றது.

'பண் கனியப் பருகிய பயன் நாடகம்,
கண் கணியக் கவர்ந்துண்டு'

எனும் செய்யுளின் மூலம் நாடகத்தின் சுவை. பயன் அனைத்தையும் திறம்பட விளக்கியுள்ளது ஐம் பெருங்காப்பியங்களில் ஒன்றான சீவக சிந்தாமணி.

பழம் பெருமை வாய்ந்த சைவ சமயக் குரவரான மாணிக்க வாசகர்.

''நாடகத்தில் உன்னடியார் போல் நடித்து''

என இறைவன் மீது மனமுருக பாடியுள்ளார். இக் கூற்றின் மூலமும் சங்க காலத்தில் நாடகத்தின் நிலைமையும், திறனையும், உணரக் கூடியதாக உள்ளது.

அபி நவ கவி நாதன் என போற்றப்படும் கம்பன் செய்த இராமாயணத்திலே, கம்பர் இராமனை கதாநாயகனாக கொண்டு உணர்ச்சி, செயல் போன்ற நாடக இயல்பையும், நாடகத்தைப் பற்றிய அறிவை உலகிற்கே வாரி வழங்கி விட்டார்.

கருத்தக்களை வெளிப்படுத்தல் நாடகத்தின், ஒரு பண்பாகும். மகா பாரதம் கதையிலே 'நன்றி மறப்பது நன்றுன்று' என்பதை விளக்குவதற்காக கண்ணனை ஒரு பாத்திரமாக கொண்டு நாடகம் பற்றி அறியாமையை போக்கி, நாடக ஊற்றை வளம் படுத்தி விட்டார் புலவர் வில்லி சங்காலத்திலும், இன்றும்

பிரதித்தி பெற்று விளங்கும் பரத நாட்டியமும் ஒரு வகை நாடகமே, பரதம் உணர்ச்சிகளை வெளிகாட்டி ஒரு நாடக கலைப்பண்பையே உருவாக்கி விட்டது.

மன்னர்களையும், அவர்களின் சிறப்பியல்பையும் கொண்டு நாடகமாக எழுத முயன்றுதால், நாடக அம்சத்தை உயர்த்தி இருப்பதை சங்க இலக்கியங்களிலே பெரிதும் காணலாம். கொடையை உணர்த்த குமான மன்னன், பாரி மன்னன் போன்ரோரை வைத்து மக்கள் இரசிக்க கூடிய வகையில் நாடகங்களை அமைத்து விட்டனர்.

சங்க புலவர்கள்!

நாடகக்கலை பெருமை பாராட்டுதற்குரிய ஒன்றாகும். எனவே. நடிப்பை உண்ர்த்தும் நாடக அரங்கு தூய்மையான இடத்திலே அமைய வேண்டும் என்பது இலக்கணம். இவ்வாறு சங்க காலத்திலும். தற்போதைய நவீன நாகரீகத்தாலும் விருத்தி அமைத்துள்ள நாடகத் திறனை காண்பதே இம் மனிதபிறவியில் நற்பேறாகும்.

பிரபாகரன்.
ஆண்டு 11 'R'.


**Well wisher**

தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிக்கை

வாளாண்மை போலக் கெடும்

K. Nanda Kumar
Karunkali
Kaarai Nagar

With best Compliments from:

# I. G. ENTERPRISES

Dealers in Fancy Goods & Textiles

180 - 2/6, 2nd COROSS STREET
COLOMBO-11

With best Compliments from:

# DEVELOPMENT LOTTERY

DEVELOPMENT LOTTERY CENTRE

199, UNION PLACE
COLOMBO-2

With best Compliments from:

# Mascons Limited

175, Sri Sumanatissa Mawatha
Colombo-12

Telephone: 25561-3

With the best Compliments of:

# Eswaran Brothers

Sole Agents for
"SUPREME" Wall Clocks

267, Sea Street

Colombo - 11

Telephone: 422744, 432599

*With best Compliments from:*

# Belcon Traders Limited

**EXPORTERS OF SRI LANKA PRODUCE**

15, First Floor, Gaffoor Building,
Colombo - 1.

Phones: 434059, 435613
Telex: 21652, 21742 Att: BELCON
Fax No: 547884

## நன்றியுடன் ஒரு வார்த்தை

★ எமது அன்பான அழைப்பை ஏற்று சிரமம் பாராது இங்கு சமூகமளித்த

அதிபருக்கும்
பிரதம அதிதி அவர்களுக்கும்
கௌரவ அதிதி அவர்களுக்கும்
பாடசாலைப் பிரதிநிதிகளுக்கும்

★ சிரமம் பாராது பண உதவியும், பொருள் உதவிகளையும் தந்து ஒத்தாசை புரிந்த பெற்றோருக்கும்,

★ அன்புடன் வழிகாட்டிய பொறுப்பாசிரியர்க்கும்,

★ அலங்கார வேலைகளின் முழுப்பொறுப்பையும் ஏற்ற ஆண்டு 11Q வகுப்பு மாணவர்களுக்கும்,

★ அட்டைப்படத்தை வடிவமைத்துத் தந்த சகோதரர் ராஜ்குமார் அவர்களுக்கும்,

★ குறுகிய காலத்தில் சஞ்சிகையை அச்சிட்டு வெளியிட உதவிய ஜெஸ்மின் அச்சகத்தாருக்கும்,

★ மறந்த ஆனால் மறக்க முடியாத அனைவருக்கும்,

★ பழைய மாணவர்களுக்கும்,

★ சஞ்சிகைக்கு செய்திகளையும், கட்டுரைகளையும், கவிதைகளையும் தந்து உதவியவர்களுக்கும்.

**எம் உள்ளம் கனிந்த நன்றிகள்**

With best Compliments from:

## Capitol Air Express Intl (Pte) Ltd

4th Floor Lloyds Building Colombo I

Tel- 440453 - 422241.

*With best Compliments from:*

## NEW MOON TRADERS

COMMISSION AGENTS, DEALERS IN MADE TEA, AKEN CEYLON PRODUCE, EXPORTERS AND IMPORTERS

196 New Moor Street

Colombo 12

JESMIN PRINT COL. 12
PHONE 545866